# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
# The Gazette of the Democratic Socialist Republic of Sri Lanka

අති විශෙෂ    அதிவிசேஷமானது    EXTRAORDINARY

අංක 902/18 – 1995 දෙසැම්බර් 21 වැනි බ්‍රහස්පතින්දා – 1995.12.21

902/18 ஆம் இலக்கம் — 1995 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 21 ஆம் திகதி வியாழக்கிழமை

NO. 902/18 – THURSDAY, DECEMBER 21, 1995

(ආණ්ඩුවේ බලය පිට ප්‍රසිද්ධ කරන ලදී.)    (அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)    (Published by Authority)


## I වැනි කොටස : (I) වැනි ඡෙදය – සාමාන්‍ය

### 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டம்

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 35 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படுவதான 18 ஆம் பிரிவின் கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட கட்டளைச் சட்டம்.

செயலாளர்,
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.

கொழும்பு,
1995 திசெம்பர் 21.

#### கட்டளைச் சட்டம்

1. இக் கட்டளைச் சட்டம் 1995 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, பிரதித் துணைவேந்தரின் கட்டளைச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன், அது வர்த்தமானியில் வெளியிடப்பட்டதன் மேல் வலுவுக்குவருதலும் வேண்டும்.

2. சட்டத்தின் 35 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய ,ஒரு பல்கலைக்கழகத்தின் பிரதித் துணைவேந்தர் ஒருவர் (இதனகத்துப் பின்னர் "பேரவை" எனக் குறிப்பீடு செய்யப்படுவதான) பல்கலைக்கழகத்தின் பேரவையினால், பல்கலைக்கழகத்தின் நிரந்தரச் சிரேட்ட பேராசிரியர்கள், பேராசிரியர்கள், இணைப் பேராசிரியர்கள் மற்றும் சிரேட்ட விரிவுரையாளர்கள் (தரம் I) என்போரிடையேயிருந்து ஆணைக்குவினால் கவனத்துட் கொள்ளப்படுவதற்குப் பல்கலைக்கழகத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட இரு பெயர்களிலிருந்து நியமிக்கப்படுதல் வேண்டும்.

3. ஆளெவரும் ஒரு பல்கலைக்கழகத்தின் பிரதித் துணைவேந்தராக அடுத்தடுத்து வரும் இரு காலப் பகுதிகளுக்கு அதிகமாக நியமிக்கப்படலாகாது.

4. பிரதித் துணைவேந்தர் பல்கலைக்கழகத்தின் முழுநேர அலுவலராகவிருத்தல் வேண்டுமென்பதுடன், அவர் முன்னரே பதவியை வறிதாக்கினாலொழிய, அல்லது 5 ஆம் பந்தியின் கீழ் பதவியிலிருந்து அகற்றப்பட்டாலொழிய, அவரது நியமனத்தேதியிலிருந்து கணிக்கப்படும் மூன்றாண்டுக் காலப்பகுதிக்கு அல்லது அவரது அறுபத்தைந்தாவது வயதை அவர் பூர்த்திசெய்யும்வரை, எச்சம்பவம் முன்னர் நிகழ்கின்றதோ அதுவரை பதவிவகித்தல் வேண்டும்.

5. பிரதித் துணைவேந்தர் ஆணைக்குழுவின் கலந்தாலோசனையுடன் நற்காரணத்துக்காகப் பேரவையினால் பதவியிலிருந்து அகற்றப்படலாம்.

6. பிரதித் துணைவேந்தர் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தருக்கு முகவரியிடப்பட்ட கடிதத்தின் மூலம் தமது பதவியிலிருந்து நீங்கலாம்.

7. பிரதித் துணைவேந்தர் தமது பதவியிலிருந்து இல்லாதொழியும்போது அல்லது பதவியிலிருந்து அகற்றப்படும்போது, அவர் தமது அறுபத்தைந்தாவது ஆண்டைப் பூர்த்தி செய்திருந்தாலொழிய, பிரதித் துணைவேந்தராக அவரை நியமிக்கப்படுவதற்கு முன்னர் அவரினால் வகிக்கப்பட்ட நிலையான பதவியை மீண்டும் ஏற்கவேண்டும்.

8. பிரதித் துணைவேந்தர், சுகவீனம், இலங்கையில் இல்லாமை அல்லது வேறு காரணத்துக்காகத் தமது பதவிக்குரிய கடமைகளைத் தற்காலிகமாகப் புரிய இயலாதவராகயிருப்பின், பேரவையானது, அத்தகைய இயலாமை ஏற்பட்டதன் மேல், பிரதித் துணைவேந்தர் பதவிக்குரிய கடமைகளைக் கொண்டு நடாத்துவதற்காகத் தகுதியென அது எண்ணக்கூடியவாறான அத்தகைய ஒழுங்குகளைச் செய்தல் வேண்டும். அத்தகைய ஒழுங்குகள் செய்யப்படும்வரை, துணைவேந்தர் அல்லது அவரது நியமத்தர் அத்தகைய பதவிக்குரிய நாளாந்தக் கடமைகளைக் கொண்டு நடாத்துதல் வேண்டும்.

9. பிரதித் துணைவேந்தர், பதவியில் ஏதேனும் வெற்றிடம் ஏற்படுமிடத்து, பேரவை, அத்தகைய வெற்றிடம் ஏற்பட்டதன்மேல், 2 ஆம் பந்தியின்கீழ் நிரந்தரமான நியமனமொன்று செய்யப்படும்வரை, பிரதித் துணைவேந்தரின் பதவிக்குரிய கடமைகளைக் கொண்டு நடாத்துவதற்காகத் தகுதியென அது எண்ணுகின்றவாறான அத்தகைய ஒழுங்குகளைச் செய்தல் வேண்டும். அத்தகைய ஒழுங்குகள் செய்யப்படும்வரை, துணைவேந்தர் அல்லது அவரது நியமத்தர் அத்தகைய பதவிக்குரிய நாளாந்தக் கடமைகளைக் கொண்டு நடாத்துதல் வேண்டும்.

10. சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, பிரதித் துணைவேந்தரின் தத்துவங்கள், கடமைகள், பணிகள் என்பன, பல்கலைக்கழக மாணவர்களின் அலுவல்கள் தொடர்பாக விருத்தல் வேண்டும்.

11. 1984 ஒற்றோபர் 25 ஆம் தேதிய 320/6 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட "1984 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பிரதித் துணைவேந்தரின் நியமனத்துக்கான நடவடிக்கைமுறை பற்றிய கட்டளைச்சட்டம்" இத்தால் நீக்கப்படுகிறது.

12. இக் கட்டளைச் சட்டத்தில் —

"சட்டம்" என்பது, 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டம் எனப் பொருள்படும் ;

"ஆணைக் குழு" என்பது, சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு எனப் பொருள்படும் ; அத்துடன்

"பல்கலைக்கழகம்" என்பது, சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழகம் எனப் பொருள்படும்.